Owned and published by B. Arjunan from 17.2.102
D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed
by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24
Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th October. 2011



**TV,Radio & Magazine Viewers,Listners and Readers**



**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை
SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்



**உங்கள் தொலைக்காட்சியில்**



**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m
**Z TAMIL TV**
EVERY Wednesday 5.45 - 6.00 a.m

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041

E-mail:arjunglory@yahoo.co.in
Website: thewordofchristsouthindia.com

*Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக**
கொலோசெயர் 3:16

*ஆசிரியர்*
**B. அர்ஜூனன்**

மரம் 11 அக்டோபர் 2011 கனி 11

## TARSUS - தர்சு

- அப்போஸ்தலனாகிய பவுல் பிறந்த இடம் - அப்.9:11; 22:3.
- தர்சுவின் தலைமையிடம் சிலிசியாவாக இருந்தது - அப்.21:39.
- பர்னபா சவுலை (பவுலை) சந்திக்கும்படி தர்சுவுக்குப்போனான் - அப்.11:25-26.
- ரோம இராஜ்யத்தில் தெற்கு ஆசியா மைனரிலுள்ள ஓர் முக்கியமான பட்டணம்.
- கிரேக்க நாட்டின் கல்வி மற்றும் நாகரிகம் போன்றவற்றின் செல்வாக்கு தர்சு பட்டணத்தை ஒரு அறிவுசம்பந்தமான மையமாக மாற்றியது.
- இந்த நகரத்தின் தாழ்வான பகுதியில் உள்ள ஏரியில் நதி வந்து கலப்பதினால் இது செழிப்பான வளமான பகுதியாயிருந்தது.
- இது 33-ல் மகா அலெக்சாண்டர் என்பவரால் ஜெயிக்கப்பட்டது.




## கர்த்தருடைய ஊழியம் வளர்ந்து பெருக

### உதவ காத்திருக்கும் இவர்களோடு தொடர்புகொள்ளவும்


சகோ. பிரபாகரன்
நாமக்கல் மாவட்டம்
9597860409


சகோ. கோவிந்தராஜன்
தஞ்சை மாவட்டம்
9952685685


சகோ. மாயாண்டி
மதுரை மாவட்டம்
9159795725


சகோ. ராஜாமணி
திருநெல்வேலி மாவட்டம்
9940841932


சகோ. டேவிட்
சேலம் மாவட்டம்
9597352233


சகோ. ராஜசெல்வம்
கன்னியாகுமரி மாவட்டம்
9487954973


சகோ. பிளசன்
நாகை மாவட்டம்
9092171897


சகோ. ராம்ராஜ்
திருப்பூர் மாவட்டம்
9487043077


சகோ. யோவான்
விழுப்புரம் மாவட்டம்
9940487200


சகோ. ஜோதி
தேனி மாவட்டம்
9843837498



## வேத அறிவுப் போட்டி எண் : 134

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. பரிதானம் எதைக் கெடுக்கும்?
2. அவர் (இயேசு) பலவீனத்தால் சிலுவையில் அறைப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறாரா?
3. ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காக கொடுத்தாலும் அது முற்றிலும் என்னசெய்யப்படும்?
4. ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் என்று பவுல் எந்த சபையாருக்கு எழுதுகிறார்?
5. இஸ்ரவேலர்களோ கலகம்பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை என்ன செய்தார்கள்?
6. நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியை என்ன செய்யாதிருங்கள்?
7. பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் என்ன பண்ணினது?
8. உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. எவர் சமீபமாயிருக்கிறார்?
9. தோட்டத்தின் வேலியைப்போல இருந்த தம்முடைய வேலியை (கர்த்தர்) என்ன செய்து போட்டார்?
10. எது உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது?

கர்த்தருடைய ஊழியம் வளர்ந்து பெருக
உதவ காத்திருக்கும் இவர்களோடு தொடர்புகொள்ளவும்


சகோ. ஜான் எஸ். நாதன்
திருவள்ளூர் மாவட்டம்
9444443378


சகோ. வல்கனோ பிலிப்பு
சென்னை மாவட்டம்
9710929234


சகோ. அர்ஜுனன்
திண்டுக்கல் மாவட்டம்
9443558041

**"Go ye into all the world, and preach the gospel to every creature"**
Mark 16:15

**"The Churches Of Christ Salute you"** Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

சிறுவர் பகுதி

# தந்திரம் - DECEPTION

## வேதபகுதி:மத்தேயு 4:1-10



வேதப்பகுதி: மத்தேயு 4: 1–10

**ஏமாறிய ஆதாம், ஏவாள்:** தந்திரம் என்றால் சூழ்ச்சி, அல்லது ஏமாற்றுதல் என்று பொருள். பிசாசானவன் தந்திரமுள்ளவன் ஆகையால் ஆதியிலே நம் முற்பிதாக்களாகிய ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றினான். “நீங்கள் தோட்டத் திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்று ஏவாளைப்பார்த்து கேட்டான். அதற்கு ஏமாந்துபோன ஏவாள் நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும்,தோட்டத்தின் நடுவிலே இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார். அதற்கு சர்ப்பம் நீங்கள் சாகவே சாவதில்லை நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றான். இதற்கு கீழ்ப்படிந்து பறித்து புசித்து பாவத்தின்கீழ் தள்ளப்பட்டார்கள்.

**ஏமாறாத கர்த்தர்:** பிசாசு இயேசுவை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் அவனுக்கு பிரதியுத்தரமாக; மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். பின்பு பிசாசு அவரைத் தேவாலயத்து உப்பரிகையின்மேல் நிறுத்தி, நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு அப்பாலே போ சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். நீங்களும் உங்களை ஏமாற்ற வரும் பிசாசை கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு எதிர்த்து இயேசுவைப்போல அப்பாலே போ சாத்தானே என்று சொல்வீர்களா?

மனப்பாட வசனம் : “சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே” (2கொரி.2:11)



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 11 அக்டோபர் - 2011 கனி - 11

ஆசிரியருரை

# ஒரே இருதயமும் ஒரே மனமும்
# One Heart and One Soul




எல்லோருக்கும் ஒரே இருதயமும் ஒரே மனமும் இருக்கிறதா? ஒரே இருதயம் மட்டுமே எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் ஒரே இருயமும் ஒரே மனமுமாக அநேகர் இருப்பதில்லை. முதல் நூற்றாண்டு கர்த்தருடைய சபையில் இப்படிப்பட்ட ஐக்கியம் காணப்பட்டது. “விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள் ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது” (அப்.4:32). இன்றைக்கு என்னுடையது உன்னுடையது என்று எங்கும்சொல்லக்கேள்விப்படுகிறோம். உன்னைப்போல பிறனையும் நேசி என்ற வேதவாக்கியத்தை கைக்கொண்டவர்களாக இருப்போமானால் என்னுடையது உன்னுடையது என்று சொல்லமாட்டோம். ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு சபையானது ஆவியில் வளர்ந்து பெருகினது. விசுவாசிகள் உற்சாகமுள்ளவர்களாக எங்கும்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கிக்கிறவர்களாக இருந்தார்கள். ஆனபடியினாலே அவர்களுக்குள்ளாக இந்த விதமான ஐக்கியம் காணப்பட்டது. ஊழியத்தை வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடு எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள். மேலும் “அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள், இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்” (அப்.2:46,47). அநுதினமும்

கூடிஜெபிக்கிறவர்களாக இருந்தார்கள். இந்நாட்களில் வாரத்தின் முதல் நாளில் கூடி தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டு வருகிறோம். வாரத்தில் ஒரு நாள் கூடி வருவதிலே, அநேகர் ஒழுங்காக கூடிவருவதில்லை. நினைத்தபொழுது சபைக்கு வந்துபோகிறார்கள். இப்படி இருக்கும்போது ஒரு மனம் ஏற்படவாய்ப்பு இல்லை. முதல் நூற்றாண்டு சபையாரை நோக்கிப்பார்க்கவேண்டும். “காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்” (அப்.2:45). ஒருவனுக்கு குறைச்சல் உண்டு என்று கண்டு அவனுக்கு கொடாவிட்டால், உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கும்? நன்மை செய்ய அறிந்தும் அதை செய்யாமற்போனால் அதுவே பாவமாயிருக்கும். ஒரே இருதயமும் ஒரே மனமும் உடையவர்களாக மாறவேண்டுமானால், சபையில் குறைச்சல் உள்ளவர்களை தாங்கவேண்டும். விசேஷமாக விசுவாசகுடும்பத்தார்களுக்கு நன்மைசெய்யக்கடவோம் என்று காலாத்தியர் புஸ்தகத்தில் வாசிக்கிறோம்.

**நாமும் ஒரே இருதயமும் ஒரே மனமும் உடையவர்களாக இருக்கவேண்டும் என வேதாகமம் போதிக்கிறதா** என்று நீங்கள் கேட்கலாம். ஆம், நம்ஆண்டவர் “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்” என்றார் (யோவா.13:35). நாம் ஆண்டவருடைய சீஷர்கள் என்பதற்கு அடையாளம் பட்டமோ, பதவியோ, உடையோ அல்ல மாறாக அன்பு நிறைந்தவர்களாக இருக்கவேண்டும். குறிப்பாக ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும். நான் ஒரு சபைக்கு பிரசங்கிக்கும்படியாக அழைக்கப்பட்டிருந்தேன். சபை ஆராதனை முடிந்தவுடன், அந்த திருச்சபையார் கண்மூடி கண்திறப்பதற்குள்ளாக எல்லோரும் களைந்து சென்று விட்டனர். அப்பொழுது புரிந்து கொண்டேன் அவர்களுடைய ஐக்கியத்தைப் பற்றி இவ்வளவுக்கும் அந்த சபையார் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். இன்னும் சொல்லப்போனால் ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள். இப்படியிருந்தால் ஐக்கியம் எப்படி ஏற்படும். ஆதிசபையார் இப்படியிருந்ததாக வேதாகமத்தில் நாம் வாசிக்கின்றோமா? ஆண்டவர் சொல்லுகிறதான அன்பு நமக்குள் ஏற்படவேண்டும். ஆண்டவர் நம்மை மீட்கும்படியாக தன்னுடைய ஜீவனையே சிலுவையில் கொடுத்தார். நாமும் ஒருவருக்காக ஒருவர் ஜீவனை கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். அதை மறந்துவிடாதீர்கள். “உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக, தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர்



**7. யூதாகோத்திரம்; தீர்க்கதரிசனம்:** கி.மு735–698 காலத்தில் கூறப்பட்டது சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதில்லை. நியாயப்பிரமாணிகன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை, ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் (ஆதி.49:10; மீகா.5:2). **நிறைவேறுதல்:** இயேசு... யூதாவின் குமாரன் லூக்.3:26; மத்.1:2.

**8. ஈசாவின் குடும்பவழி; தீர்க்கதரிசன காலம்:** கி.மு 745–680 ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும் ஏசா11:1. **நிறைவேறுதல்:** இயேசு... ஈசாயின் குமாரன் லூக்.3:32; மத்.1:6.

**9. தாவீதின் வீட்டாரிலிருந்து தீர்க்கதரிசன; காலம்:** கி.மு 627–580 இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார் அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம் பண்ணி, பூமியில் நியாயத்தையும், நீதியையும் நடப்பிப்பார் எரே.23:5. **நிறைவேறுதல்:** இயேசு.... தாவீதின் குமாரன் லூக்.3:32; மத்.1:1; 9:27; 15:22; 20:30–31; 21:9,15; 22:41–46 மாற்.9:10,47,48 லூக்.18:38,39; அப்.13:22–23; வெளி22:16 கவனிக்க: ஈசாக்குக்கு குறைந்தது 8 மகன்கள் இருந்தனர், ஆனால் தேவன் அவர்களில் மற்ற 7 பேரை புறக்கணித்துவிட்டு தாவீதை மாத்திரம் தெரிந்து கொண்டார் (1சாமு.16:10,11).

என்ன கேள்வியானாலும்,
அவரே பதிலாயிருக்கிறார் (யோவா.14:6)
என்ன பிரச்சனையானாலும்,
அவரே பரிகாரி (மத்.11:28,29)
என்ன காயமாயிருந்தாலும்,
அவரே சுகமாக்குகிறவர் (லூக்.4:18)
என்ன அடிமைத்தனமாயிருந்தாலும்,
அவரே விடுவிக்கிறவர் (யோவா.8:32)
என்ன பாரமாயிருந்தாலும்,
அவரே மேற்கொள்ளுகிறவர் (யோவா.16:33)
என்ன தேவையாயிருந்தாலும்,
அவரே சப்ளையர் (மத்.7:7,8)
என்ன பாவமாயிருந்தாலும்,
அவரே மன்னிக்கிறவர் (எபி.10:12–17)

**-The Voice of Truth International**

இயேசு
Jesus

சரித்திர ஆய்வு

# தெரிந்துகொள்வோம்

**John S.Nathan** Gospel Minister
cell:9444443378

## பிறக்கப்போகிற மேசியாவைக்குறித்து தீர்க்கதரிசனங்களும் அவைகளின் நிறைவேறுதல்களும்



இன்றைய நாளில் இந்தியாவில் காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையில் மதவாதிகள் தாங்கள் ஆராதிக்கும் கடவுளைக்குறித்து சரித்திர சான்றுகளையும், பூகோள ஆதாரங்களில் ஒன்றாகிலும் கிடைக்குமா என்று ஏங்கி தடுமாறி வருவதால், மக்களினம் வழி வழியாக கொண்டிருந்த மத நம்பிக்கையை மாத்திரம் கூறி மக்களை குழப்பியும், தாங்களும் குழம்பியிருக்கும் நிலையில் இருக்கின்றனர். ஆனால் உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் இல்லாத தனி சிறப்பு **கிறிஸ்தவமார்க்கத்திற்கு தான் உண்டு** என்பதை சரித்திர சான்று, பூகோள ஆதாரம், அறிவியல் ஆதாரம், தீர்க்கதரிசன நிறைவேறுதல் ஆகியவைகளைக்கொண்டு இயேசு கிறிஸ்துவின் பிறப்பு 1. ஸ்திரீயின் வித்தாகவும், 2. கன்னியிடம்பிறந்தார் 3. தேவகுமாரன் 4. ஆபிரகாமின் வித்து என்கிற தலைப்பில் கடந்த நாட்களில் கண்டோம். இனி தொடர்ந்து வேதாகமத்தை நன்கு ஆராய்ந்து தெளிவு பெறுவோமாக.

**5. ஈசாக்கின் குமாரன்; தீர்க்கதரிசன:** தேவன் ஆபிரகாமை நோக்கி அந்தப் பிள்ளையையும் (இஸ்மவேல்) உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்கு துக்கமாயிருக்கவேண்டாம், **ஈசாக்கினிடத்தில்** உன் சந்ததி விளங்கும் என்றார் (ஆதி.21:12).

ஆபிரகாமுக்கு, ஈசாக்கு இஸ்மயேல் என்ற இருகுமாரர்களில் வாக்குதத்தத்தின் மகனான **ஈசாக்கை** தெரிந்து கொண்டு, இஸ்மயேலை புறக்கணித்தது கவனிக்கத்தக்கது, ஏனெனில் இந்த சந்ததியாரால் இரட்சகருக்கும், அவரைப்பின்பற்றக்கூடிய கிறிஸ்தவர்களுக்கும் தொல்லைகள், தீமைகள் பல உண்டு என்பதை அறிக. **நிறைவேறியது:** "இயேசு.... ஈசாக்கின் குமாரன் (இஸ்மயேலின் குமாரன் அல்ல) லூக்.3:34; மத்.1:2.

**6. யாக்கோபின் குமாரன்; தீர்க்கதரிசனம்:** காலம் கி.மு.2000–1400 ஆண்டு அவரைக்காண்பேன், இப்பொழுது அல்ல, அவரைத் தரிசிப்பேன் சமீபமாய் அல்ல, ஒரு நட்சத்திரம் **யாக்கோபிலிருந்து** உதிக்கும் (ஏசாவிடமிருந்து அல்ல) அதுமோவாபின் எல்லைகளை நொறுக்கி சேத் புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும் எண்ணா24:17. **நிறைவேறுதல்:** யாக்கோபு, ஈசாக்கின் குமாரன் லூக்.33:34; 1:33; மத்.1:2 ஏசா, யாக்கோபு ஆகிய ஈசாக்கின் இரு குமாரர்களில், தேவன் யாக்கோபை தெரிந்துகொண்டு **ஏசாவை** புறக்கணித்தார்.



முந்திக்கொள்ளுங்கள்" என்று பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதியிருக்கிறதை நாம் ரோம.12:9,10 வசனங்களில் வாசிக்கிறோம். உங்களுடைய அன்பு எப்படிப்பட்டதாயிருக்கிறது? ஆண்டவர் அன்பு செலுத்தியதைப்போல நீங்களும் சகோதரரில் அன்பு செலுத்துங்கள். ஒருவரும் உங்களை இந்தவிஷயத்தில் குற்றப்படுத்த இடம்கொடாதிருங்கள். மேலும், கலாத்தியர் புஸ்தகத்தில் வாசிக்கிறோம்; "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா.6:2). கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவது என்பது சபைக்கு சென்றால் மட்டும்போதாது, மற்றசகோதரர்கள் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கவேண்டும். அவர்களுடைய பாடுகளில் நாமும் பங்குகொள்ளும்போது, அது அவர்களுக்கு சுமையைக் குறைப்பதாக இருக்கும். இது ஆண்டவருடைய பிரமாணமாக இருக்கிறது. வேதம் வாசிக்கிறோம், அதை மனப்பாடம் செய்கிறோம், அதன்படி பாவமில்லா வாழ்க்கை வாழ்கிறோம். நல்லதுதான், அதேவேளையில் மற்றவர்களையும் நாம் நோக்கிப் பார்க்கவேண்டும். பவுல் தன்னுடைய வாழ்க்கையில் பிரசங்கிக்கிறவராக மட்டுமல்ல மாதிரி கிறிஸ்தவராக ஜீவித்தார். எடுத்துக்காட்டாக பாருங்கள்: அவர் பிலேமோனுக்கு எழுதியகடிதத்தில்; "அவன் உமக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும்" என்கிறார் (பிலே.18). ஓடிப்போன ஒநேசிமுக்காக பவுல் பிலேமோனிடம் மன்றாடுகிறார். நான் பெற்ற மகன் என்று சொல்லுகிறார். கிறிஸ்துவுக்குள்ளாக அவனை பெற்றெடுத்தார். அவன்தானே தவறு செய்தான், நான் ஏன் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிலேமோனோடு வாக்குவாதம் செய்யவில்லை. அதை தன் கணக்கிலே வைத்துக்கொள்ளும் நான் அதை செலுத்தித் தீர்ப்பேன் என்கிறார். இந்தவிதமாக மற்ற சகோதரர்கள் படக்கூடிய கடனை நாம் ஏற்கிறோமா? இதுதான் அன்பு பிரியமானவர்களே, இதுதான் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கான வழி, இதை இன்றைய கிறிஸ்தவம் செய்யுமேயானால் உலகமுழுவதும் கிறிஸ்தவர்கள்தான் இருப்பார்கள். நாம் பைபிள் வாசிக்கிறோம், சபைக்குப்போகிறோம், கிறிஸ்தவகுடும்பமாக வாழ்கிறோம். யாருக்காவது உதவி செய்தால் குடும்பத்தில் சண்டை வந்துவிடும் என்ற பயத்தில் உதவி செய்யாமலிருக்கிறோம். இப்படியிருக்கிற ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ, கர்த்தரையும் அவருடைய கட்டளைகளையும் பற்றிக்கொள்ள இயலாது.

**ஒரே இருதயமும் ஒரே மனமுமுடையவர்களாக இருக்க நாம் செய்யவேண்டுவதென்ன?** ஆண்டவருடைய சிந்தை முதலாவது நமக்குள் இருக்கவேண்டும். இதையே பவுல் பிலிப்பியருக்கு நினைப்பூட்டி எழுதுகிறார். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலி.2:5).

அவர் தேவசித்தம் செய்கிறவராய் எங்கும் சுற்றித்திரிந்தார். இன்றைக்கு இருக்கிற ஊழியன் எதை வாங்கலாம், எதை விற்கலாம், எப்படி பணம் சம்பாதிக்கலாம், யாரை ஏமாற்றலாம் என்ற நோக்கத்தோடு வருவானேயானால் அவன் எப்படி தேவசித்தம் செய்யமுடியும்? அவனுக்குள்ளாக கிறிஸ்துவின் சிந்தை இருப்பது எப்படி? கிறிஸ்துவுக்கேற்ற சிந்தை நமக்குள் இருக்கும்போது அவருடைய கிருபை நம்மோடு இருக்கும். நாம் செய்வதை தேவன் வாய்க்கச்செய்வார். யாக்கோபு சொல்லுகிறார்; “நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள், நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது” (யாக்.5:16). ஒரே மனமுடையவர்களாக இருப்பதற்கு ஜெபம் மிகவும் முக்கியம். முதலாவது ஜெபிக்கிற பழக்கம் இருக்கவேண்டும். ஆண்டவருடைய நாமத்தினாலே நாம் ஒருமனப்பட்டவர்களாக கூடிவந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளவேண்டும். ஆதிசபையார் ஆற்றங்கரையில் கூடிஜெபித்தார்கள், விசுவாசிகளுடைய வீடுகளில் கூடிஜெபித்தார்கள். ஜெபஆலயங்களில் ஜெபித்தார்கள் என்றெல்லாம் வாசிக்கிறோம். நமக்கு கிடைக்கக்கூடிய நேரங்களில் ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திற்கு அதிக நேரம் செலவுசெய்யவேண்டும். ஜெபம் இல்லாத வாழ்க்கையும் கூரை இல்லாத வீடும் ஒன்றுதான். மேலும் மிகமுக்கியமான ஒரு வசனத்தை நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன்; “ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்” (கொலோ.3:13). இந்த சிந்தை ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும். அவனை நாம் மன்னிப்பதா? அவன் செய்த காரியத்தை மறக்கமுடியுமா? இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் முடிவில் மன்னியாது போய்விடுவோம். கிறிஸ்து நம்மை மன்னித்ததைப்போல நாமும் மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். குறைபாடுகள் எல்லாருக்குள்ளும் இருக்கும். குறைபாடு இல்லாதவனே இல்லை. எல்லோரும் குறைவானவர்கள்தான். இதை மனதில் கொண்டு ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்கள் குற்றங்களை உங்களுக்கு மன்னித்து உங்களை ஏற்றுக்கொண்டதுபோல நீங்கள் அவரவர் குற்றங்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளவேண்டும். இது வேதாகமத்தின் போதனையாகவும், ஆவியானவருடைய வெளிப்படுத்தலாகவும் இருக்கிறது. இப்போதனைக்கு கீழ்ப்படிவீர்களா?

**இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்குமா?**

ஒரே சாயலில் ஏழுபேர் இருப்பார்கள் என்று சொல்லக்கேள்விப்பட்டிருக்கிறோம். அவரைப் பார்த்தால் என்னுடைய நண்பனைப்போல இருக்கிறதே என்று சொல்லுகிறோம் அல்லவா, அதைப்போல



## யார் வேதாகமத்தை வாசிக்கவேண்டும்?

## Who Should Read The Bible?



இளைஞர் ------------- எப்படிவாழ எனக் கற்றுக்கொள்ள
வயோதிபர் ------------ எப்படி மரிக்க என அறிய
படிப்பில்லாதோர் ------ ஞானத்திற்காக
படித்தவர் ------------- தாழ்மைக்காக
செல்வந்தர் ------------ கருணைக்காக
ஏழை ----------------- ஆறுதலுக்காக
பெலவீனர் ------------ பெலத்திற்காக
அகந்தையுள்ளோர் ---- எச்சரிப்புக்காக
தாழ்மையுள்ளோர் ----- உயர்த்தப்படுவதற்காக
துன்பப்படுவோர் ------ சமாதானத்திற்காக
சோர்வடைந்தோர் ----- இளைப்படைவதற்காக
சந்தேகிப்போர் -------- நம்பிக்கைக்காக
பாவி ----------------- இரட்சிப்பிற்காக
கிறிஸ்தவன் ----------- போதிக்கப்படுவதற்காக



## வாசகர் கவனத்திற்கு...

- 2012-ம் வருட சந்தா செலுத்திவிட்டீர்களா?
- உங்கள் நண்பர்களுக்கும் சந்தா செலுத்தி அவர்களும் சத்தியத்தை அறிய உதவிடலாமே!
- உங்களுக்கு வரும் மாத இதழில் கவர் லேபில் முகவரியை கவனியுங்கள். உங்கள் பதிவு எண் Ref.No-----(S) இருந்தால் நீங்கள் சந்தா செலுத்துபவர். இல்லையேல் உடனே செலுத்தி தொடர்ந்து மாதஇதழை பெற்றுக்கொள்ளுங்கள்.
- சந்தா செலுத்தாதவர்களுக்கு வரும் ஆண்டில் இவ்விதழ் நிறுத்தப்படும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.
- இவ்விதழ் தேவைப்படுவோர் உங்களுடைய முழு முகவரியை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பிவைக்கவும்.
- ஆவிக்குரிய புத்தகங்கள் பெறவிரும்புகிறவர்கள் தொலைக்காட்சி அல்லது ரேடியோ நிகழ்ச்சியை கேட்டு அந்நாளில் வந்த செய்தியின் தலைப்பை தெரியப்படுத்தி இவைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

# பழைய மனிதன் – The Old Man

**- *Ravi Asir***



ரோமர்6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.

பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு நம்மை தற்காத்து கொள்ள நாம் செய்யவேண்டியது என்ன? பாவத்துக்கு மரிக்க நாம் செய்யவேண்டியது என்ன?

ரோமர்6:2 பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? பாவத்துக்கு மரிக்க நாம் என்ன செய்யவேண்டும்?

எபேசியர்4:21 இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படியே முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். கொலோசெயர்3:9 ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே. பழைய மனுஷன் பாவஞ்செய்கிறவனாயிருக்கிறான்.

எபேசியர்2:2-3 வசனங்கள் பழைய மனுஷனுடைய தன்மைகளை படம்பிடித்துக் காட்டுகின்றன. அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

ரோமர்2:9-11 வசனங்கள் பழைய மனுஷனையும் புதிய மனுஷனையும் ஒப்பிட்டு பேசுகின்றன. முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்குசெய்கிற எந்த ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்.

தேவனிடத்தில் பட்சபாதமில்லை. எசேக்கியேல்18:20 பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை...




இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும் என வேதம் பதிலளிக்கிறது. "தண்ணீரில் முகத்துக்கு முகம் ஒத்திருக்குமாப்போல, மனுஷரில் இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும்" (நீதி.27:19). இப்படிப்பட்ட இருதயமுள்ளவர்களாக தாவீதும் யோனத்தானும் இருந்தார்கள். முதல் நூற்றாண்டு சபையார் இப்படிப்பட்டவர்களாக இருந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்துவந்தார்கள். இயேசுசொல்கிறார்; "உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.18:19). ஒருமனம் இருக்கும்போது இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும். ஒரே காரியத்தை சிந்தித்து செய்வார்கள். ஒருமனப்பட்டவர்களாக தேவனை ஆராதிப்பார்கள். எங்கே இருதயம் ஒத்திராமற்போகுமென்றால், அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் விசுவாசிகள் பிணைக்கப்படும்போது, நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தம் ஏற்படும்போது, ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏற்படும்போது, அவிசுவாசியுடன் விசுவாசி பங்குகொள்ளும்போது இருதயம் ஒத்துவராமல் ஆசீர்வாதக்குறைவு ஏற்படும். இதை தவிர்க்க அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருந்து, விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**ஜெபியுங்கள்**

செப்டம்பர் மாதம் நடைபெற்ற ரீட்டிட்டை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...

உண்மையுள்ள ஊழியர்களை கண்டையும்படி தேவன் கிருபை செய்தமைக்காக...

இக்கூட்டங்களுக்கு உதவி செய்த சகோதரர்களுக்காக...



**வேத அறிவுப்போட்டி எண் 133 –ல் வெற்றிபெற்றவர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | TMt.மரகதம் திரவியம் | -கோம்பை |
| 2. | V.F.சர்லோ | -பாண்டி |
| 3. | G.பூங்கோதை | -கோபி |
| 4. | S.தேவகிருபை | -கோடை |
| 5. | Sis.வசந்தா | -கோவை |
| 6. | R.ராஜாத்தி | -கோம்பை |
| 7. | A.ரெபேக்காள் | -மதுரை |
| 8. | IRA.எதிராசன் | -சங்ககிரி |
| 9. | A.டென்சிங்மனோகர் | -மதுரை |
| 10. | Mrs.சரோஜினிமுத்து | -தாராபுரம் |
| 11. | Mrs.ஜெபசீலி | -திருச்சி |
| 12. | R.ஸ்டெல்லா இளமதி | -தாராபுரம் |
| 13. | Mrs.ரூபிபிரகாஷ் | -தாராபுரம் |
| 14. | Mrs.தயாஜெயராஜ் | -தாராபுரம் |
| 15. | J.நிர்மலாஜான் | -மதுரை |
| 16. | Mrs.பொன்னிவிக்டர் | -தாராபுரம் |
| 17. | K.மோகன் | -குமாரபாளை |

**வேத அறிவுப்போட்டி எண் 133 –ன் விடைகள்**

1. நெகேமியா -நெகே,5:19
2. தேவனுடைய வார்த்தை - வெளி.19:13
3. மொர்தெகாய் -எஸ்தர்
4. தமது வார்த்தையினாலே - மத்.8:16
5. யோபு -யோபு 10:12
6. பவுலை -அப்.26:21
7. பரதேசியாயிருந்தான் - சங்.105:23
8. அல்லவே -ரோம.9:7
9. தன் ஆத்துமாவை -நீதி.8:36
10. இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தர் மூலமாய் - 1கொரி.8:6



# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

## பாடம் -6 கொலைசெய்தல் - **Killing**

***J.C.Choate***




J C Choate

-தொடர்ச்சி

காயீன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் நிலத்தின் கனியை மட்டும் காணிக்கையாக செலுத்துகையில் ஆபேல் காணிக்கை செலுத்துவதில் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பழுதற்ற முதற்கனியாகிய தன்னுடைய ஆட்டினை செலுத்தினான். அதன் விளைவு தேவன் ஆபேலுடைய பலியை ஏற்றுக் கொண்டு காயீனுடைய பலியை நிராகரித்தார். இந்த காரியம் காயீனை கோபமடையச் செய்தது, அவனுடைய கோபம் ஆபேலை கொலை செய்யும்படி செய்தது. இந்த சம்பவம் தேவன் அவனுடைய பாவத்தினிமித்தம் அவனை தண்டித்தார்.

மோசேயின் பழைய ஏற்பாட்டு கட்டளைகளில் ஒன்று மிக எளிமையானது, "கொலை செய்யாதிருப்பாயாக" (யாத்.20:13). இருந்தபோதிலும் பத்துகட்டளைகள் அதிகமாக கட்டுப்படுத்தக்கூடியதல்ல, இது எப்போதுமே ஒரு நீதிக் கட்டளையாகயிருக்கிறது. அதாவது பூமி உண்டானது முதல் இவை மனிதன் தேவனுடைய கட்டளையினாலும், மனிதர்களின் கட்டளையினாலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தான். உதாரணமாக, கிறிஸ்துவின் கட்டளையில், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்துகையில், இது நிச்சயமாக நாம் கொலை செய்யக்கூடாது என்று கற்பித்தது. பவுல், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்" என்றார் (ரோம.12:17). மறுபடியும், அவன், "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" (ரோ.12:19). பவுல் கொலை செய்தல் மாம்சத்தின் செயல் என்றார். மேலும் அவர் இப்படிப்பட்ட செயலைச் செய்கிற எவனும் பரலோகத்திற்குப் போகமுடியாது, அதாவது அவர்கள் மனந்திரும்பி, இப்படிப்பட்ட செயலிலிருந்து திரும்பி தேவனுக்கு கீழ்ப்படியாதவரை இவர்கள் பரலோகத்திற்குச் செல்ல முடியாது என்கிறார் (கலா.5:21). யோவான் "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்" (வெளி.21:8).

ஆனால் கொலை செய்வது ஏன் தவறாயிருக்கிறது? ஏனென்றால்



உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான்' ரோம.13:4 என்ற வசனத்தை மறந்து போகக்கூடாது.

அன்பு சகோதரியே, லீதியாளைப் பற்றிய இந்தப் பாடத்திலே, நாம் அறியவேண்டியவை: அவள் ஐரோப்பாவில் முதலாவது கர்த்தருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து தன் குடும்பத்தாரோடு இரட்சிக்கப்பட்டாள். அத் தேசத்தில் சுவிசேஷம் பரவ உதவினாள். அவள் தன் பாரம்பரியத்தைப் பாராமல் தேவனுடைய வசனம் கிடைத்தவுடன் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டாள், பிறகு தாமதமில்லாமல் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து தான் மட்டுமல்லாது தன் வீட்டாரோடுங்கூட ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாள். கடைசியாக தேவஊழியரை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள். இவளுடைய குணங்கள் இவளுக்கு விசேஷித்த மேன்மையைக் கொண்டுவருமல்லவா? நாமும் இவளைப் போல தேவனுடைய விருப்பத்தைச் செய்து விசேஷித்த மேன்மையான நித்திய ஜீவனைப் பெற தேவன் தாமே உதவி செய்வாராக!

### நடப்புச் செய்திகள்

- தமிழக பள்ளித்தேர்வு முறையில் மாற்றம்: மதிப்பெண்முறை கிடையாது; கிரேடு முறை அறிமுகம். அடுத்த கல்வி ஆண்டில் அமல்.
- சிக்கிம் பூகம்ப நிவாரண பணிகளுக்கு ரூ1,000 கோடி ஒதுக்கியுள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளார்.
- இந்தியாவுக்கான பிரிட்டன் தூதரக அதிகாரி ராஜசேகரின் மகள் ரம்யா வயது 18 பிரிட்டன் மற்றும் பிரான்சுக்கும் இடையே 560 கிலோ மீட்டர் நீளமுள்ள ஆங்கில கால்வாயில் நீந்தி சாதனை படைத்துள்ளார்.
- ஓட்டுப்போடுவதற்கு 14 ஆவணங்களை காட்டலாம், என தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது.
- உலகளவில், இளம் வயதினர் பாதுகாப்பற்ற உடலுறவு மேற்கொள்வதாக சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

அட்டைப் பகுதியில் பின்புறம் உள்ள **கிறிஸ்துவின் வசனம்** டி.வி நிகழ்ச்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது. **தமிழன் டிவியில்** ஒவ்வொரு திங்கள் காலை 6.00 மணிக்கும் மற்றும் சனிக்கிழமை மாலை 6.15 மணிக்கும் நிகழ்ச்சிகள் வெளிவருகிறது.

## தெரிந்து கொள்ளுங்கள் கால்குலேட்டர்

கால்குலேட்டரை கண்டுபிடித்தவர் வில்லியம் சேவார்டு பாரப்ஸ் என்பவர் ஆவார். இவர் 1857 ஜூன் 28–ந்தேதி நியூயார்க்கில் பிறந்தார். அங்குள்ள தேசிய வங்கி ஒன்றில் கிளார்க்காக தனது வாழ்க்கையை தொடங்கினார். தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தால், அவர் 1882–ல் செயின்ட் லூயிஸ் பகுதிக்கு குடிபெயர்ந்தார். வங்கியில் சதவீதம், வட்டி, கூட்டல், பெருக்கல் என அன்றாடம் கணக்கிடுபவராக பணிபுரிந்ததுதான் அவரை கால்குலேட்டர் எனும் அரிய சாதனத்தை உருவாக்க மிகப்பெரிய தூண்டுகோலாக அமைந்தது.

பாருங்கள், அப்.16:14–15–ம் வசனங்களிலிருந்து இன்னும் இரண்டு பாடங்களைக் கற்றுக் கொள்ள முடிகிறது. வசனம் 15–ல் 'அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு' என வாசிக்கிறோம். இது பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள ஒரு ஞானமுள்ள ஸ்திரீயாகிய ராகாபை எனக்கு நினைவுப்படுத்துகிறது. இந்த ராகாப் கர்த்தருடைய வல்லமையை அறிந்திருந்தாள் (யோசுவா.2:10,11). கர்த்தருடைய மகத்துவங்களைக் கண்டு அவளுடைய இருதயம் நடுக்கம் கொண்டு கரைந்துபோனது. அவளுடைய தைரியம் அற்றுப்போனது. 'உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்' என்று கூறினாள். மேலும், தானும் தன்னுடைய குடும்பத்தாரையும் அழிவுக்குத் தப்புவித்துக்கொள்ளும்படிக்கு வேவுகாரரை நோக்கி: ''நீங்கள் என் தகப்பனையும் என் தாயையும் என் சகோதரரையும், என் சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச் சாவுக்குத் தப்புவிக்கும்படி, எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்கவேண்டும்' (யோசு.2:13) என்று கேட்டுக்கொண்டு தன்னையும் தன் வீட்டாரையும் தப்புவித்துக் கொண்டாள். ஆம், இந்த லீதியாளும் கூட தன் வீட்டாரோடு நித்திய அழிவுக்குத் தப்பித்துக் கொள்ளும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாள். நாமும் இவ்வுலகத்தின் பாவங்களினின்றும், வரப்போகும் நித்திய ஆக்கினையினின்றும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும்படி தேவ நியதிகளை நிறைவேற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அடுத்ததாக, இந்த லீதியாள் தேவனுடைய ஊழியர்களாகிய பவுலையும், சீலாவையும் நோக்கி, நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று வருந்திக்கேட்டுக் கொண்டாள் (அப்.16:15) என வாசிக்கிறோம். அன்பு சகோதரியே, கர்த்தருடைய பணியைச் செய்யும் ஊழியர்களை உங்கள் இல்லங்களில் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அல்லது உங்களுடைய பெரிய பங்களாவிற்கு முன்பாக நாய் ஒன்றை கட்டிப்போட்டு ஒருவரும் உங்கள் இல்லத்திற்குள் பிரவேசிக்கவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? கர்த்தருடைய பணியைச் செய்கிற எளிமையான ஊழியர்கள் தேவனுடைய பார்வையில் மேன்மையானவர்கள். இவ்வுலகின் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவரிலும் மேலானவர்கள். தேவனுக்குச் சேவை செய்கிறவர்கள். ஆம்! சூனேம் என்ற ஊரிலிருந்த ஒரு கனம் பொருந்திய ஸ்திரீ தேவனுடைய மனுஷனாகிய எலிசாவுக்கு தன்னுடைய மெத்தையின் மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும் குத்துவிளக்கையும் வைத்து தேவனுடைய ஊழியரை தன்னுடைய வீட்டில் ஏற்றுக்கொண்டாள். அதனிமித்தம் தேவன் அவளை ஆசீர்வதித்து, பிள்ளை இல்லாதிருந்த அவளுக்குக் கர்ப்பத்தின் கனியைக் கொடுத்தார் (2இரா.4:8–17). அன்பு சகோதரியே, இயேசு ''சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (மத்.10:42). அநேகர் தேவ ஊழியர்களைக் குறித்து தவறான எண்ணங்கொண்டவர்களாய் அவருக்குச் செலுத்த வேண்டிய கனத்தைச் செலுத்துவதில்லை 'உனக்கு நன்மை



வாழ்க்கை என்பது புனிதமானதும் மதிப்பு மிகுந்ததுமாயிருக்கிறது. உலகத்திலிருக்கிற ஒவ்வொருவருக்கும் இது உரியது. இதற்குப் பதிலாக இது பெறக்கூடாததும் அல்லது திரும்பப் பெறக்கூடாததுமாயிருக்கிறது. தேவன் மனிதனை உண்டாக்கினார் ஆனபடியினால் வாழ்வை கொடுத்தவர் தேவன்.

அநேக மக்கள் பல காரணங்களுக்காக கொலை மற்றும் விரோதத்தினால் கொலை செய்வதும் தவறல்லவா? ஆனால் ஒருவனுக்காக தன் சொந்த ஜீவனை எடுப்பதும் கூட தவறு என்பது புரிந்து கொள்ளப்படவேண்டியதாகும். ஒருவன் தற்கொலை செய்யும்போது, அவன் தனக்கும் தேவனுக்கும் விரோதமாக பாவஞ்செய்கிறான். ஆனபடியினால் அவன் மனந்திரும்புவதற்கு வழியே கிடையாது. யுதாஸ் ஸ்காரியோத், அப்போஸ்தலர்களில் ஒருவன், இவன் தற்கொலை செய்கிறவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டானவனாயிருக்கிறான். தற்கொலை செய்வது தவறு மட்டுமல்ல, ஆனால் இது கோழைத்தனமாயிருப்பதற்கு அடையாளமாயிருக்கிறது. இதுவும்கூட தனக்குள்ளே ஒரு பாவமாகும். நிச்சயமாக ஒருவன் இப்படிப்பட்ட மனக்கவலையில் தற்கொலை செய்வானானால் தன் செயலுக்காக கணக்குக் கொடுக்க முடியாதவனாயிருக்கக் கூடிய தருணம் உண்டு. எனவே இப்படிப்பட்ட மனிதன் நியாயத்தீர்ப்பில் நிற்பது மிகவும் அபாயகரமானது ஏனென்றால் நாம் எப்போதும் உண்மைகளை அறியாதவர்களாயிருப்போம். தற்கொலை செய்துகொள்ளுவது தவறு என்பதை நாம் அறியோம். மேலும், நம்முடைய சொந்த வாழ்வை நாம் அழித்துக்கொள்ளுவது ஒருபோதும் குற்றமாக கருதவாய்பில்லை.

நம் நாட்களில் இருக்கும் மற்றொருபிரச்சனை, அறிவுத்திறன்கள் அறிவியல் அறிஞர்கள் மற்றும் இதுபோன்ற பலர், உருக்குலைந்துள்ள, மனநோயால் பாதிக்கப்பட்ட சிசுக்களையும் குழந்தைகளையும் கருணைக்கொலை செய்கின்றவர்கள், மரிக்கும் தருவாயிலுள்ளவர்களை தற்கொலை செய்ய அனுமதிப்பது, வயதானவர்களை உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய அல்லது விஷ ஊசி போட்டுக் கொள்ளும்படி செய்வதில் முன்னேற்றமடைந்து வருகின்றனர். இப்போது இது மிகவும் கொடூரமானது ஆனால் இந்த பழக்கங்கள் ஏற்கனவே சில இடங்களில் கருத்தில் இருந்து வருகின்றது. நிச்சயமாக ஹிட்லரை நாம் அறிவோம். இவன் தன் நாட்களில் இப்பேர்பட்ட சில பழக்கவழக்கங்களை அறிமுகப்படுத்தினான். உலகம் இது கொடூரமானது என எண்ணியது. ஆனால் கடந்த காலத்தில், மக்கள் தொகைப் பெருகிக்கொண்டிருப்பதோடு, அதிகமதிகமான அறிவியல் முன்னேற்றங்கள் உண்டாக்கப்பட்டிருப்பதோடு, பிறகு உலகம் இப்போது மேலும் குறிப்பாக வரவிருக்கின்ற வருடங்களில் இதை வித்தியாசமாக பார்க்கலாம்.ஆனால் இது கருணை என்ற பெயரில், மனிதாபிமான செயலாகவும், தர்க்கங்கள் நிறைந்ததாகவும் அல்லது எப்படியிருந்தாலும், ஆனால் இப்படிப்பட்ட பழக்கவழக்கங்களில் ஈடுபடுவது சாதாரமானது, ஆனால் கொலை, கொள்ளை செய்வது போன்றவை மனிதனுக்கும், மனிதனை உண்டாக்கிய தேவனுக்கும் எதிரான பாவமாயிருக்கிறது என நினைக்கலாம். இதற்காக அதிகமான கிரயம் செலுத்த ஒன்றுமில்லாத போதிலும் மனித வாழ்க்கை மிகவும் எளிதானது என்று நினைப்பதற்கு உங்களை வஞ்சிக்க இடமளிக்காதீர்கள்.

இதற்கப்புறம் கருக்கலைப்பும் ஒன்றுதான். கருக்கலைப்பு என்றால் என்ன? இது குழந்தை கற்பபையிலேயே கொல்லப்படுவதாகும். அத்துடன் பிறப்பதற்கு முன்பே குழந்தையைப் பிடித்து இழுத்துக் கொல்லப்படுதல். அதிகமான கருக்கலைப்பு ஒழுக்கமற்ற பெண்களிடம் தான் நடைபெறுகிறது. மேலும் ஆணும் பெண்ணும் இந்தப் பாவச்செயலில் தங்களுடைய பாவத்தை அழிப்பதற்கென்றே செய்கின்றனர். சில நிலைகளில், திருமணமான ஜனங்களே தங்களுக்கு அதிகக் குழந்தைகள் வேண்டாம் என நினைத்து கருக்கலைப்பு செய்கின்றனர். ஆனால் எப்பேர்பட்ட நிகழ்வாயிருந்தாலும் சரி, இது மனித வாழ்வை கொலை செய்கின்ற சர்வசாதாரண உண்மையாயிருக்கிறது. ஆனபடியினால் இது கொலை செய்வதைவிட குறைவானதல்ல. ஆனால் ஒரு குழந்தை பிறப்பதற்கு முன் எப்பேர்பட்ட தாய் இந்த பயங்கரமான செயலை செய்ய விரும்புவாள்? இப்போதும் உலகம் கருவில் பூரண வளர்ச்சியடைந்த குழந்தையை கொல்லுவதா அல்லது தாயின் கருப்பையில் புதிய வாழ்வை பெற்றுக் கொள்வதா என விவாதத்தில் ஈடுபடுள்ளது, இது மனித சுபாவமுள்ளது அல்லது இல்லை? நிச்சயமாக இது மனித சுபாவமுள்ளது. மக்கள் தங்களுடைய மனசாட்சியைக் குற்றப்படுத்தும்படி அதை நிரூபிக்க முயற்சித்து உண்மையிலேயே கொலை செய்வதால் ஒன்றுமில்லை என்கின்றனர். உலகத்தைச் சுற்றிலும் சட்டப்படியே ஒவ்வொரு வருடமும் கோடான கோடி கணக்கான குழந்தைகள் கொல்லப்படுகின்றனர் என்பது கவலைக்குரிய ஒன்று. நாம் ஹிட்லர் ஒரு மிருகத்தனமான மனிதன் என நினைத்தோம். இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்யும் எந்த வகையான டாக்டர்களையும் நர்சுகளையும் நாம் கொண்டிருக்கிறோம். தினசரி குழந்தைகளை அந்த டாக்டர் கொலை செய்கிறார் என நீங்கள் அறிந்திருப்பீர்களென்றால் உங்களுடைய வாழ்வை காப்பாற்றும்படி அந்த டாக்டரை பயன்படுத்த விரும்புவீர்களா? நான் நிச்சயமாக செய்யமாட்டேன். எப்போதும் டாக்டர்களும் நர்சுகளும் மக்களுடைய உயிரை காப்பாற்றவே முயற்சிக்கும்படி தங்களை ஒப்படைத்துள்ளனர், கொலை செய்யும்படி அல்ல என்றுதான் நினைத்தேன். ஆனால் எல்லா டாக்டர்களும் நர்சுகளும் இப்படிப்பட்ட கொடூரமான வேலையில் இல்லாதது குறித்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அந்தநாள் வருகையில் மொத்த கருக்கலைப்புகளும் சட்டத்திற்கு விரோதமானதாயிருக்கும்.

இதற்கு அடுத்தபடியான காரியம் ஒன்று உண்டு. சில நிகழ்வுகளில் ஒருவன் மற்றொருவனை விபத்தில் கொன்று விடலாம். அந்த மனிதனுடைய கட்டுப்பாட்டை மீறி, இது விபத்தாயிருக்குமானால், நிச்சயமாக அந்த மனிதன் இதற்காக கணக்குக் கொடுக்க வேண்டியவனாயிருக்கமாட்டான். அத்தோடு தன்னைக் காத்துக் கொள்ளும் விஷயத்தில் யாரோ ஒருவர் உன்னை உன்னுடைய இடத்திற்கு போகவிடாமல் தடுத்து, உன்னுடைய உயிரை காக்கும் பொருட்டும் மற்றவர்கள் உயிரை காக்கும் பொருட்டும், நீ அந்த மனிதனைக் கொன்றிருக்கலாம். யாத்திராகமம் 22:2 இந்த விஷயத்தில் கொலை செய்யப்பட்டவனின் இரத்தப்பழி அவன்மேல் சுமராது என்று கூறுகிறது. இன்றும், நிச்சயமாக இதுதான் உண்மையாயிருக்கிறது. கடைசியாக, மரணதண்டனை பற்றிய காரியமும் உண்டு. பவுல் ரோமர் 13 நமக்குக் கூறுகிறார். சட்டம் நம்மைக் காப்பாற்றும்



பெண்கள் பகுதி

# விசேஷித்த மேன்மை

## Special Distinction

-J.GloryArjunan



ஒரீரு மாதங்களுக்கு முன்பாக விசேஷித்த மேன்மைக்குரிய சில ஸ்திரீகளைக் குறித்து பார்த்தோம். இப்போதும் கூட விசேஷித்த மேன்மைக்குரிய மற்றொரு ஸ்திரீயைக் குறித்துப் பார்ப்போம்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவ ஊழியர்களாகிய பவுல், சீலா போன்றோரை ஐரோப்பாவில் முதலாவது ஏற்றுக்கொண்டவளாகக் கருதப்பட்டவள் லீதியாள். அன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சீஷர்கள் ஒவ்வொரு தேசமாக கிறிஸ்துவின் சுவிசேஷத்தை, அதாவது அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைப் பற்றி பிரசங்கித்துக் கொண்டு வந்தார்கள். "அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்" (அப்.16:14). இந்த ஸ்திரீ முன்னமே தேவனை வணங்குகிறவளாயிருந்தாள். ஆனாலும் பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார் என வாசிக்கிறோம். அப்படியானால், அவள் தேவனை வணங்குகிறவளாயிருந்தாலும் தேவனுடைய சித்தம் செய்ய அறியாதவளாயிருந்தாள் என்று தான் பொருள். எப்படியெனில் கர்த்தருடைய வசனத்திற்குச் செவிசாய்த்து பின்பு அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர் என்று வசனம் 15–ல் வாசிக்கிறோம். நான் தேவனை வணங்குகிறவள், எனக்கு எல்லாமே தெரியும் என்று சொல்லி அவள் அத்தோடு நின்றுவிடவில்லை, தேவன் அவள் இருதயத்தைத் திறந்தபோது அதைக் கடினப்படுத்தாதபடி பவுல் கூறின தேவனுடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாள். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, நீங்கள் ஒருவேளை தேவனை வணங்குகிறவர்களாயிருக்கலாம், இருந்தபோதிலும் தேவனுடைய சித்தத்தின்படி நீங்கள் இரட்சிக்கப்பட "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்ற மாற்கு 16:16–ம் வசனத்திற்கேற்ப ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இதையறியாத அநேகர், நாங்கள் பரம்பரை கிறிஸ்தவர்கள், நாங்கள் தேவனைத் தான் வணங்குகிறோம், எங்களுடைய மூதாதையர் எல்லாரும் சபையில் குருமார்களாகவும், உபதேசிகளாகவும் இருந்தார்கள் என்று சொல்லி தேவனுடைய சித்தம் அறியாதவர்களாகவே கடைசி வரை ஜீவித்து மரித்துப் போய்விடுகின்றனர். ஆனால், தேவனுடைய வசனம் நம்மை நியாயந்தீர்க்கிறதாக இருக்கிறது என்பதை மறந்து போகக்கூடாது.

வைத்தார்கள், அவருடைய சரீரம் கல்லறையிலிருந்து காணப்படாமற்போயிற்று! வேதாகமத்தில் கூறப்பட்டது போல அவர் உண்மையாகவே உயிர்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதற்கு இரண்டு சாட்சியங்கள் உண்டு.

(1) அவருடைய விரோதிகள் அவருடைய மரித்த சரீரத்திற்கு உரிமை பாராட்டிக்கொண்டிருந்தாலும் கூட காவலாளிகள் கல்லறை வெறுமையாக இருக்க கண்ட பிறகு, அவர்கள் ஒருபோதும் அந்த சரீரத்தைக் கொண்டு வரவில்லை. அவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்திருக்கவில்லையென்றால் அவர் உயிர்த்தெழுந்தார் என்று தெரிவிக்கிறவர்களின் வாய்களை மிக எளிதாக அடைத்திருந்திருக்கக் கூடும்! ஆனால் அவர்கள் அதைச்செய்யவில்லை - ஏனென்றால் அவர்களால் அது முடியவில்லை!

(2) இயேசுவின் மரணத்தின் போது, அவருடைய சீஷர்கள் தங்களுடைய சொந்த ஜீவனை காக்க, பயத்தினால் அவரை மறுதலித்துவிட்டார்கள். அவருடைய உயிர்தெழுதலுக்குப் பிறகு, அவர் அவர்களுக்கு இருமுறை காட்சியளித்து உலகமெங்கும் சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். இதை அவர்கள் செய்து, மிகுந்த உபத்திரவத்தினால் மரணத்திற் குள்ளானார்கள். தங்கள் திடநம்பிக்கையில் இந்த தத்ரூபமான மாற்றம், இயேசு உண்மையாகவே தங்களுடைய உயிர்தெழுந்த இரட்சகர் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டது உண்மை என்பதற்கு ஒரு பலத்த சாட்சியாயிருக்கிறது.

வேறு எந்த ஒரு சமய ஸ்தாபகரும் மரணத்தை ஜெயிக்கவில்லை. இதுவே கிறிஸ்தவத்திற்கும் மற்றவற்றிற்குமுள்ள அடிப்படையான வித்தியாசம். "...இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள்சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோம.8:11) என நாம் வாக்களிக்கப்பட்டுள்ளோம்.

**இலங்கை ஆசியசேவை SW 25 மேற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.30 முதல் 5.45 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

## பொது அறிவு சோதனை

1. வானம் நீல நிறமாக காட்சி அளிக்க காரணம் என்ன?
   அ)ஒளி விலகல் ஆ)கதிர் வீச்சு இ)துகள்களால் ஒளிச்சிதறல்
2. முதன் முதலில் விண்வெளிபயணம் செய்த வீராங்கனை யார்?
   அ)வாலன்டீனா ஆ)அனுசுயாதேவி இ)ஷைனி
3. செய் அல்லது செத்து மடி என்ற தாரகமந்திரத்தை சொன்னவர்யார்?
   அ)பாலகங்காதர திலகர் ஆ)மகாத்மாகாந்தி இ)வ.உ.சிதம்பரனார்
4. ஒரு குதிரை திறன் என்பது எத்தனை வாட்?
   அ)700 வாட் ஆ)736 வாட் இ)746 வாட்
5. ரோம் நகரம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்ததாக கூறப்படுபவர் யார்?அ)நீரோ ஆ)ஜீலியஸ் சீஸர் இ)ஆண்டனி

விடைகள்:
1. துகள்களால் ஒளிச்சிதறல்
2. வாலன்டீனா
3. மகாத்மாகாந்தி
4. 746 வாட்
5. நீரோ



படியாகவும், தவறுசெய்கிறவர்களை தண்டிக்கும்படியாகவும் வேலை செய்கிறது என்கிறார். ஆனபடியினால் ஒருவன் ஒரு விரோதத்தினால் கொலை செய்கிறவனாய் மாறும்போது, ஒரு கொலையாளியாக மாறும்போது அவன் தான் வாழ்வதற்கான, அத்துடன் வாழ்கின்ற மக்கள் மத்தியில் வாழும் உரிமையையும் இழந்துவிடுகிறான். இதற்குமேலும் அரசாங்கங்கள் நீதிக்குரிய சட்டங்கள் தேவனுக்காக செயல்படுத்துகிறது. மேலும் ஏனென்றால் சட்டத்தின் மூலம் தீமைசெய்பவர்களைத் தண்டிக்கும்படிக்கு இது தேவனுடைய செயலாக இருக்கிறது.

முடிவாக, விரோதத்தினால் கொலை செய்வதும், ஒன்றுமறியாதவர்களை கொன்று போடுவதும் தவறு என புரிந்துகொள்ளமுடிகிறது. நாம் இதைச் செய்யக்கூடாது, அல்லது இவ்வகையான எதிலும் பங்குகொள்ளாதிருக்க வேண்டும். நாம் நம்முடைய பிள்ளைகள் தங்களுடைய நண்பர்களுடன் அமைதியோடு வாழும்படி அவர்களுக்கு கற்பித்து, பயிற்சியளிக்க வேண்டும். ஒருபோதும் வேண்டுமென்றே மற்றவர்களின் வாழ்வை அளிப்பது குற்றம் என்ற உணர்வை கண்டிப்பாக ஏற்படுத்தவேண்டும்.

வேதாகமத்தில் தீங்கிழைக்கும் மனிதர்கள் கிறிஸ்துவை, தேவனுடைய குமாரனை, ஒருபாவமும் அறியாதவரை இழுத்துச் சென்று கொடூரமான சிலுவையில் அறைந்து, இவ்விதமாக அவரைக் கொலை செய்தார்கள், விரோதத்தினால் துஷ்டமான வகையில் அவரைக் கொன்றார்கள். ஆனால் கொடூரத்திலும் கொடூரமான அந்த மரணத்தின் மூலம் பலியின் மூலமும் நாம் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட முடியும் (யோவா.3:16; ரோம.5:6).

என்னுடைய நண்பர்களே, நீங்கள் இரட்சிக்கப்படவும் உங்களுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெறவும் இதுபோதுமானது. நீங்கள் தேவனிடத்திலும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்திலும் உங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு உங்களுடைய பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவீர்களென்றால், பிறகு கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்ளுவார். பாவமன்னிப்புக்கென்று இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாக கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய மனிதனாக மாறுவது எப்பேர்பட்ட அற்புதமானது. தயவுசெய்து இதைக்குறித்து தீவிரமாக சிந்தியுங்கள். உங்களோடுகூட இனிமேலும் நாம் கற்றுக்கொண்டால் அல்லது உங்களுடைய கீழ்ப்படிதலுக்கு உங்களுக்கு உதவிசெய்வோம். தயவுசெய்து இதுபற்றி அறிந்துகொள்வோம்.

உங்களுடைய கவனத்திற்கு நன்றி. அடுத்த முறை சந்திக்கும்வரை கர்த்தர் உங்களோடிருப்பாராக!

"கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" - மத்.5:21,22

பெண்கள் பகுதி

# நான் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறேன் என்பது குறித்து கவலையில்லை

# It`s Doesn`t Matter Which Religion I Follow

***-Betty***



உலகில் பல சமயங்களும், பல புனித நூல்களும் பல மத குருக்களும் உண்டு. இந்த பல்வேறு சமயங்களின் ஸ்தாபகர்கள் 'புனிதர்கள்' என தங்கள் சீடர்களால் கருதப்படுகின்றனர். அநேக ஜனங்கள் வழக்கம்போல தங்களுடைய பெற்றோர்களின் சமயத்தைப் பின்பற்றுவதில் நிலைத்திருந்தாலும், உண்மையில் எல்லா சமயங்களும் ஒன்று என்றும், முடிவில் விளைவானது, எல்லாருக்கும் ஒரே விதமாக இருக்குமென்றும் நினைக்கின்றனர். அவர்கள் "எல்லா சமயங்களும் நல்லவனாயிரு, நல்லதைச் செய்" எனப் போதிக்கிறது. இதுவே போதுமானது நீங்கள் முகமதுவையோ அல்லது கிருஷ்ணனையோ அல்லது இயேசுவையோ பின்பற்றினால் பரவாயில்லை எல்லாமே ஒன்றுதான்! என விவேகத்துடன் விளக்குகின்றனர்.

ஆனால் இது ஒன்றானதா? பல்வேறு சமய சீடர்களை பின்வரும் இவைகளின் மூலம் வேறுபடுத்த உங்களால் முடியுமா?

- அவர்களின் ஆடை அணியும் விதத்தை உற்றுநோக்கல்?
- அவர்களுடைய சொற்பொழிவுக்குக் கவனம் செலுத்துதல்?
- அவர்கள் மற்றவர்களை நடத்தும் விதத்தை உற்று நோக்கல்?
- அவர்களுடைய நடத்தை மற்றும் கௌரவத்தை பகுத்துப் பார்த்தல்?
- அவர்களுடைய வாழ்வில் எது முக்கியமானது என்பதை பார்த்தல்?
- அவர்கள் குடும்ப அங்கத்தினரோடு எவ்வாறு சமாளிக்கிறார்கள் என்பதை கவனித்தல்?
- அவர்கள் எங்கு, மற்றும் எவ்வாறு ஆராதிக்கிறார்கள் என்பதை உற்றுப் பார்த்தல்?
- அவர்கள் தேவனிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என அறிந்து கொள்ளுதல்?



- அவர்களுடைய வாழ்க்கை தத்துவம், மரணம், மற்றும் பிற்கால வாழ்வு போன்றவற்றை கேள்விபடுதல்?
- அவர்கள் எவ்வாறு தங்கள் வாழ்வில் பாவத்தை சமாளிக்கிறார்கள் என கற்றறிதல்?
- அவர்களுடைய குரு மற்றும் புனிதநூலின் போதனையை படித்தல்?

நிச்சயமாக, ஒவ்வொரு சமயத்தினை ஒப்பிட்டுப்பார்ப்பதில் நாம் இப்பட்டியலை தொடரலாம், மேலும் நாம் தொடக்கத்திலிருந்து முடிவுவரை போதனைகளும் பழக்கவழக்கங்களும் அனுதின வாழ்வில் ஒரு முழுமையான வித்தியாசத்தை ஏற்படுத்துவதோடுகூட நித்திய எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறதை காணலாம்.

நாம் ஏதோ சில சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நமது முற்பிதாக்களின் சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நம்மைச் சுற்றியிருக்கிற கூட்டத்தாருடைய சமயத்தைப்பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. தனித்தனியே, ஒவ்வொரு மனிதனும் ஒரு அழிவில்லாத ஆத்துமாவாகும், மேலும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வில் நாம் தெரிந்தெடுக்கும் சமயத்திற்காக நித்தியத்தில் பதிலளிக்க வேண்டியவர்களாக இருப்போம். நாம் உணர்ச்சியற்றவர்களாய், அக்கறையுடனிருக்க விரும்பாதவர்களாய் இருந்தால், நாம் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறோம் என்பது பற்றி கவலையில்லை என்ற தீர்மானத்திற்கு வரலாம்.

நாம் ஞானமுள்ளவர்களாயிருந்தால் ஒப்பிட்டுப்பார்க்க, போதனைகளைக் கற்க, ஜனங்களின் வாழ்வின் முடிவில் ஏற்படும் விளைவைக் காணவும்கூட அதிக விருப்பமுடையவர்களாயிருப்போம், ஏனென்றால் இவையெல்லாவற்றின் முடிவிலும் நாம் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும்.

கிறிஸ்தவத்துக்கும் மற்றெல்லா சமயங்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளில் முதன்மையானதும் அதிக பிரதானமானதுமான ஒரு வேறுபாடு என்ன? அது இதன் ஸ்தாபகர், இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு அவருடைய மரித்தசரீரம் அடக்கம்பண்ணப்பட்டதேயாகும். இது வரலாற்று உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, பல சாட்சியங்களின் விஷயம் தெரிந்தவர்களால் இதை மறுக்க முயற்சித்தும் கூட முடியாமல் போயிற்று அவருடைய சங்கதி அவர் தம்முடைய சீஷர்களுக்கு போதித்தவற்றை தொடர்ந்து போதித்த சீஷர்களோடு கூட அங்கு முடிந்திருக்குமானால், விந்தையான கொள்கைகளை விவரித்து, சீஷர்களின் குழுக்களை ஏற்படுத்தி தங்களுடைய சமயத்தை தங்களுடைய மரணத்திற்குப் பின் உலகத்திற்கு மரணசாசனமாக ஏற்படுத்துகிற மற்றவர்களோடு இவர் சமமாக கருதப்பட்டிருப்பார்

ஆனால் இச்சம்பவம் அவருடைய மரணத்தோடும், அடக்கத்தோடும் ஒரேயடியாக முடிந்து விடவில்லை. அவருடைய விரோதிகள் அவரை சிலுவையில் அறைந்த அதே நகரத்தில் அவருடைய சீஷர்கள் அவருடைய சரீரத்தை களவாடிக் கொண்டுபோக ஏதுவில்லாதபடி அவருடைய கல்லறையைச் சுற்றி காவல்